# யூலை – 10 – புதன்

## யாழிசைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: திபா. 33:2

---------------------------------------------------------------------

### முதல் வாசகம் : தொடக்க நூல்41:55–57,42:5–7,17- 24

அந்நாட்களில் எகிப்து நாடு முழுவதும் பஞ்சம் வந்தபோது, மக்கள் பார்வோனிடம் வந்து உணவுக்காக ஓலமிட்டனர். பார்வோன் எகிப்தியர் அனைவரையும் நோக்கி, "யோசேப்பிடம் செல்லுங்கள் அவர் சொல்வதைச் செய்யுங்கள்" என்று கூறினான். நாடுமுழுவதும் பஞ்சம் பரவியபொழுது, யோசேப்பு களஞ்சியங்களைத் திறந்து, எகிப்தியர்களுக்குத் தானியங்களை விற்குமாறு செய்தார். ஏனெனில் எகிப்து நாட்டில் பஞ்சம் கடுமையாய் இருந்தது. உலகமெங்கும் கொடும்பஞ்சம் நிலவியது. அனைத்து நாட்டுமக்களும் யோசேப்பிடம் தானியம் வாங்க எகிப்திற்கு வந்தார்கள். கானான் நாட்டிலும் பஞ்சம் நிலவியதால், அங்கிருந்து தானியம் வாங்கச்சென்ற மற்றவர்களோடு இஸ்ரயேலின் புதல்வர்களும் சேர்ந்துசென்றனர். அப்பொழுது, யோசேப்பு நாட்டுக்கு ஆளுநராய் இருந்து மக்கள் அனைவருக்கும் தானியம் விற்கும் அதிகாரம் பெற்றிருந்தார். எனவே அவருடைய சகோதரர்கள் வந்து, தரைமட்டும் தாழ்ந்து யோசேப்பை வணங்கினார்கள். யோசேப்பு தம் சகோதரர்களை அடையாளம் கண்டுகொண்டார். ஆயினும் அவர்களை அறியாதவர்போல் கடுமையாக அவர்களிடம் பேசி, "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றுவினவினார். அவர்களோ, "நாங்கள் கானான் நாட்டிலிருந்து உணவுப்பொருள்கள் வாங்க வந்திருக்கிறோம்" என்று பதில் கூறினார்கள். பின்னர் அவர் அவர்களை மூன்று நாள் காவலில் வைத்தார். மூன்றாம் நாள் யோசேப்பு அவர்களை நோக்கி, "நான் சொல்கிறபடி செய்யுங்கள் செய்தால், பிழைக்கலாம். ஏனெனில் நான் கடவுளுக்கு அஞ்சுபவன். நீங்கள் குற்றமற்றவர்களானால் சகோதரராகிய உங்களில் ஒருவன் சிறைச்சாலையில் அடைப்பட் டிருக்கட்டும். மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தால் வாடும் உங்கள் குடும்பங்களுக்குத் தானியம் கொண்டு போகலாம். உங்கள் இளைய சகோதரனை என்னிடம் அழைத்து வாருங்கள். அப்பொழுது நீங்கள் கூறியது உண்மையென்று விளங்கும். நீங்களும் சாவுக்குள்ளாக மாட்டீர்கள்" என்றார். அவர்களும் அப்படியே செய்தனர். அப்போது, அவர்கள் ஒருவர் மற்றவரிடம், "உண்மையாகவே நம்சகோதரனை முன்னிட்டே இப்பொழுது நாம் தண்டிக்கப்படுகிறோம். தன் உயிருக்காக எவ்வளவு துயரத்துடன் நம்மிடம் கெஞ்சி மன்றாடினான்! நாமோ அவனுக்குச் செவிசாய்க்கவில்லை! நமக்கு இத்துன்பம் ஏற்பட்டதற்கு அதுவேகாரணம்" என்று சொல்லிக் கொண்டனர். அப்பொழுது ரூபன் மற்றவர்களிடம், "பையனுக்கு எத்தீங்கும் இழைக்காதீர்கள் என்று உங்களுக்கு நான் சொல்ல வில்லையா? நீங்களோ செவிகொடுக்கவில்லை. இதோ, அவனது இரத்தம் நம்மிடம் ஈவு கேட்கிறது என்றார். யோசேப்பு மொழிபெயர்ப்பாளன் மூலம் அவர்களிடம் பேசியதால், தாங்கள் சொன்னது அவருக்குத் தெரியுமென்று அவர்கள் அறியவில்லை. அப்போது அவர் அவர்களிடமிருந்து ஒதுங்கிச்சென்று அழுதார். பின்பு, திரும்பி வந்து அவர்களோடு பேசுகையில் சிமியோனைப் பிடித்து அவர்கள் கண்முன்பாக அவனுக்கு விலங்கிட்டார்.

**பதில்பாடல் :** உம்மையே நம்பும் எங்கள் மீது பேரன்பு இருப்பதாக.

### நற்செய்தி : மத்தேயு 10 : 1 - 7

அக்காலத்தில், இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். அத்திருத்தூதர் பன்னிருவரின் பெயர் பின்வருமாறு முதலாவது பேதுரு என்னும் சீமோன், அடுத்து அவருடைய சகோதரர் அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோப்பு, அவருடைய சகோதரர் யோவான், பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, வரி தண்டினவராகிய மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோப்பு, ததேயு, தீவிரவாதியாய் இருந்த சீமோன், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து. இயேசு இந்தப் பன்னிருவரையும் அனுப்பியபோது அவர்களுக்கு அறிவுரை யாகக் கூறியது "பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்லவேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழையவேண்டாம். மாறாக, வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது "விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" எனப் பறைசாற்றுங்கள்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து அவர்களுக்குத் தீய ஆவிகளை ஓட்டவும் நோய்களை குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார் என வாசிக்கின்றோம். அந்த பன்னிருவரின் பெயர்களையும் இங்கு வாசிக்கின்றோம். அவர்களில் பெரும்பாலானோர் மிகவும் சாமானியவர்கள் அதிக படிப்பற்றவர்கள். அவர்களுடைய ஒரே வலிமை இயேசு தங்களைத் தேர்ந்துகொண்டார் என்பது மட்டும் தான். ஆம் அழைத்தல் என்பது இறைவன் தரும் ஒரு கொடையாகும் அது நன்றிக்குரியது. நம்மையும் இறைவன் .வாழ அழைத்திருப்பதும் ஒரு கொடையே. இயேசு பன்னிருவரையும் அழைத்து அவர்களுக்கு தீய ஆவிகளை ஓட்டவும் நோய்களைக் குணமாக்குவதற்கும் அதிகாரத்தைக் கொடுத்தார் என்னும் இறைவாக்கு நமக்கும் பொருந்துகின்றது. நமது வாழ்வின் எந்தச் சூழ்நிலையிலும் இயேசு நமக்கு தந்துள்ள இந்த அழைத்தலையும் அதிகாரத்தையும் மறந்து வாழ கூடாது. இந்த சமுதாயத்தில் காணுகின்ற அநீதிகளையும் தீமைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் சமுதாயத்தில் நிலவுகின்ற நோய்களையும் மனித உள்ளங்களில் உறைந்துகிடக்கின்ற தீய சிந்தனைகளையும் அகற்றி வாழ்ந்திட இறைவனின் கைகளில் கருவிகளாக நாமும் மாறிட அருள்வேண்டிடுவோம் ஆமென்.